பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 9 (25—9—72) திங்கள் வெளியூர்: புரட்டாசி 10 (26—9—72) செவ்வாய் [இதழ்: 85

கங்கை — காவிரி இணைப்புத் திட்டம்

முழு ஆய்வு செய்வதற்கு 5 ஆண்டுகள் ஆகுமாம்

சென்னை, செப். 25—
கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் பற்றிய முழு ஆய்வுகளையும் மேற்கொண்டு இறுதி செய்வதற்குக் குறைந்தபட்சம் 6 ஆண்டுகள் ஆகும்; இந்த ஆய்வுப் பணிகளுக்கு ரூ. 15 கோடி முதல் ரூ. 20 கோடி

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில் தொழில் அமைதி இல்லையா?

குதர்க்கவாதிகளின் கூற்றுக்கு முதலமைச்சர் தரும் சூடு

டில்லிப் பெரியவர்களுக்குப் புள்ளி விவரத்துடன் பதில்

கோவை, செப். 25—

"தமிழ்நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் வேலைநிறுத்தங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, 'தொழிலாளரிடையே அமைதியின்மை வளருகிறது; தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்கத்தக்க சூழ்நிலை இல்லை' என்று கருதுவது சரியல்ல! அரசியல் எரிச்சல் காரணமாகச் சிலா செய்துவரும் பிரச்சாரத்திற்குத் தொழிலதிபர்கள் பலியாகிவிடக் கூடாது!

"நாங்கள் தொழில் வளர்ச்சிக்காக இரவு பகலாகப் பாடுபடுவதும் வீணாகிவிடும்; தொழில் அதிபர்கள் தங்களின் நிபுணத்துவத்தால் மட்டும் தொழில் வளருகிறது என்ற எண்ணத்துடன் நில்லாது, 'இதற்குத் தொழிலாளர்கள் மூச்சும் காரணமாகும்' என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்; தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கும்போது 'நம்முடைய கடமைகளைச் செய்திருக்கிறோமா' என்பதை அவர்கள் – தங்கள் மனத்தில் கைவைத்து நினைத்துப் பார்க்கவேண்டும்; இந்த இருவருக்கும் இடையே பாசஉணர்ச்சி வளர்ந்தால்தான், தொழில் வளரும்!

"வெளிநாடுகளில்கூட வேலைநிறுத்தங்கள் இருக்கத்தான் செய்கிறது; எனவே, வேலைநிறுத்தங்களை மட்டும் நினைத்து எவரும் அஞ்சிடத் தேவையில்லை"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மேட்டுப்பாளையத்திற்கு அருகிலுள்ள சிறுமுகையில், ரூ. 6-கோடி செலவிலான 'விஸ்கோஸ்' நிறுவனத்தின் மூல நூலிழை (ஸ்டேபிள் பைபர்) விரிவுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் சுட்டிக்காட்டி கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் இராசாராம்

விழாவிற்கு, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் தலைமைதாங்கிப் பேசுகையில், 'பெரிய தொழில்களைத் தொடங்கும் பிரச்சினையில், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு எதிராகப் பாரபட்சமாக நடந்துகொள்கிறது' என்று குறிப்பிட்டார்.

இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஜி. கே. தேவராசுலு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், தமிழ்நாட்டின தொழில் துறை நிலவரம் பற்றிக் கவலை தெரிவித்தார்.

இதனைக் குறிப்பிட்டும் -- பிரச்சினைகளை விளக்கியும் முதலமைச்சர் கலைஞர் பேசுகையில் சுட்டிக்காட்டியதாவது:—

"இந்தத் தொழிற்சாலையில் செயற்கைப் பஞ்சு -- ரேயான நூல் ஆகியவற்றை உற்பத்திச் செய்தால், பல துணைத் தொழில்கள் வளருவதற்கு வாய்ப்பு இருக்கிறது; அதைவிட முக்கியமானது வேலை வாய்ப்பு ஏற்படுவதாகும்; ஆட்சியில் இருப்பவர்களுக்கு, 'வேலை வாய்ப்பு ஏற்படுகிறது' என்பதைவிட மகிழ்ச்சியான செய்தி வேறு ஒன்றுமில்லை,

இந்தத் தொழிற்சாலையில், தற்போதைய புதிய திட்டத்தால் 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டியிருக்கிறது.

முன்பு இந்தத் தொழிற்சாலையில் 10 டன் செயற்கைப் பஞ்சைத்தான் உருவாக்க முடிந்தது; தமிழக அரசின் ஒத்துழைப்பால், 70 டன் மரக்கூழ் மூலம் 50 டன் செயற்கைப் பஞ்சினை உற்பத்திச் செய்ய முடிகிறது.

இங்கு பேசிய ஜி. கே. தேவராசுலு ஓர் அச்சததைத் தெரிவித்தார்; அதாவது, 'தமிழகத்தில் தொழில் அமைதி இல்லை; அரசும் -- தொழில் அதிபர்கள் ஒத்துழைத்தும் தொழில் அமைதி இல்லை' என்றெல்லாம் கூறினார்.

'அரசும்–தொழில் அதிபர்களும்' என்று கூறிவிட்டு அவர் கூறாமல் விட்டிருப்பது தொழிலாளர்களைத்தான்; அரசு -- தொழிலதிபர்கள் -- தொழிலாளர்கள் மூன்று பேரும் சேர்ந்து ஒத்துழைத்தால் தொழில் அமைதி இருக்கும் என்பதை அனைவரும் உணருவது அவசியம்.

ஒரு சில பகுதியில் தொழிலாளர்களாலும் -- சில பகுதியில் தொழில் அதிபர்களாலும் தொழில் அமைதி கெடுகிறது; இதைக் கூறும்போது, 'இதற்கு அரசு காரணமல்லவா?' என்று இரு சாராருக்கும் கேட்கத் தோன்றும்.

அரசைப் பொறுத்தவரையில், இரு சாராருக்கும் இடையில் அகப்பட்டவர்கள் இதற்குக் காரணமானவர்களல்லர்!

ஏதோ 5 அல்லது 6 ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில் அமைதி கெட்டுவிட்டது போல், ஒரு பொய்ப் பிரசாரம் இருந்து வருகிறது.

1950-ம் ஆண்டிலிருந்து நடைபெற்ற வேலைநிறுத்தப் புள்ளி விவரங்களைத் தருகிறேன்; எப்போது அதிக வேலைநிறுத்தம் நடந்தது என்பது தெரியும்.

1957-ம் ஆண்டில் இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,318; அப்போது நடந்த வேலைநிறுத்த எண்ணிக்கை 248.

1958-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,250; வேலை நிறுத்த எண்ணிக்கை 261.

1959-ல் தொழிற்சாலைகளின் 4,359; வேலை நிறுத்த எண்

(4-ம் பக்கம் பார்க்க)

தொழில் அமைதிக்கு ஊறு தேடும் போக்கு

தொடர்ந்து நீடிப்பதை அரசு சகித்துக்கொள்ள இயலாது

கடுமையான தொழிலுறவுச் சட்டங்கள் இயற்றவும் தயங்கோம்

மத்திய தொழிலாளர் நல அமைச்சர் காடில்கர் எச்சரிக்கை

பூனா, செப். 25—

"உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாக அரசாங்கம் எதிர்பார்க்கின்ற ஒத்துழைப்பு வெகு விரைவில் தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கவில்லையென்றால், தொழில் துறையில் கட்டுப்பாட்டை நிலவச் செய்ய கடுமையான தொழில் உறவுச் சட்டங்கள் வரும்.

"தொழிற் சங்கங்களில் போட்டா போட்டிகளும், அவற்றின் விளைவாக அமைதியின்மையும் தொடர்ந்து ஏற்படுவதை அரசாங்கம் சகித்துக் கொண்டிருக்க முடியாது; தொழிற் சங்கத் தலைமையினர் தைரியமாகச் செயல்பட வேண்டும்; கோரிக்கைகளை எழுப்பும் ரீதியில் மட்டும் செயல்படுவதை அவர்கள் கைவிட வேண்டும்"

என்று, மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஆர். கே. காடில்கார் நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"குறைந்தபட்ச போனசுத் தொகையை 8.33 சதவிகிதமாக உயர்த்திய செயல், தொழிலாளர்களுக்கு ஆதரவான கொள்கையை அரசாங்கம் பின்பற்றுவதை வெளிப்படுத்தியிருக்கிறது; இந்நிலையில், நாட்டுப் பொருளாதாரத்தை மாற்றியமைக்கச் செய்யும் சவாலைத் தொழிலாளர் வர்க்கத்தினர் ஏற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

உற்பத்தியைப் பெருக்கத் தொழிலாளர்கள் இடையறாது முயற்சி செய்வதன் மூலமாகத்தான் அரசாங்கத்தின் போனசுக் கொள்கையை எதிர்ப்பவர்களை வாய்மூடச் செய்ய முடியும்.

வேலைநிறுத்தங்களுக்குத் தடை விதிக்கவோ அல்லது தொழிலாளர்களின் ஊதியங்களை முடக்கவோ அரசாங்கம் எண்ணவில்லை; ஆனால்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசு தொழிற் சங்கத் தலைவரின் விசித்திரக் கூற்று

கழகத் தலைவர் கலைஞர் விடுக்கும் அறைகூவல்

எல்லாக் கட்சியினரும் உடன்பாட்டுக்கு வரத் தயாரா?

கோவை, செப். 25—

"நாட்டில் எல்லா அரசியல் கட்சிகளும் தொழிற்சங்க இயக்கத்திலிருந்து விலக முன்வருமானால், திராவிட முன்னேற்றக் கழகமும் அவ்வாறே தொழிற்சங்க இயக்கத்திலிருந்து விலகத் தயார்" என்று முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

கோவையில் டாடாபாத்தில் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் புதிய கட்டடத்தை முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்தார்.

தொழிற்சங்க இயக்கத்திலிருந்து தி.மு. கழகம் விலக வேண்டுமென்று இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசுத் தலைவர் (ஜி. இராமானுசம்) தெரிவித்த கோரிக்கை குறித்து முதலமைச்சர் வியப்புத் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற்சங்கங்களைத் துவக்குவதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை என்றும், தொழிற்சங்கங்கள் எந்த அரசியல் கட்சியினுடைய பரம்பரைச் சொத்தும் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழிலாளர்கள் தங்களில் ஒருவரைத் தொழிற்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற யோசனையைச் சட்டமன்றத்தில் தாமே முதலில் வெளியிட்டதாகவும், அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களிலிருந்து விலகியிருப்பது என்ற ஓர் உடன்பாட்டுக்கு வருமானால் தி.மு.க. அந்த உடன்பாட்டை முதலில் செயல்படுத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொழிலாளர்கள் நியாயமான உரிமைகளைக் கோரும்போது, தங்களது கடமைகளையும் உணர வேண்டும்" என்று முதல்வர் கூறினார்.

சங்கப் பொதுச்செயலாளர் சு. துரைசாமி எம்.எல்.ஏ. திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்.

சிறையில் சிதம்பரனார் இழுத்த செக்கு

மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது

சென்னை, செப். 25—

"கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. சிதம்பரனார், அந்நிய ஆட்சியின்போது சிறையில் இழுத்த செக்கு சென்னையில் அரசாங்கத் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் வைக்கப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

"அதற்கு முன்னதாக அக்டோபர் 2-ந் தேதி காந்தி பிறந்த நாள் விழாவை முன்னிட்டுப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடக்கும் விழாவின்போது இந்த செக்கு, அங்கு மக்கள் பார்வைக்காக வைக்கப்படும்; என்றும் தெரிவித்தார்.

கோவையிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு சென்னை மத்திய சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் அந்தச் செக்கை, முதலமைச்சரும் -- அமைச்சர் என். வி. என். அவர்களும் பார்வையிட்டனர்.

தமிழ்நாட்டில் நெல் விளைச்சல்

உணவு அமைச்சர் நம்பிக்கை

திருவள்ளூர், செப். 23—

"தமிழ்நாட்டில் உயர்விளைச்சல் ரக தானியங்கள் சாகுபடிசெய்யப்படும் நிலங்களின் பரப்பு விரிவுபடுத்தப்பட்டிருப்பதால் இவ்வாண்டு 75 இலட்சம் டன் நெல்லும் -- புன்செய் தானியங்களும் உற்பத்தியாகுமென்று நம்புகிறேன்"

என்று, உணவு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தெரிவித்தார்.

திருவள்ளூர் அருகில் விஷ்ணுவாக்கம் கிராமத்தில் உயர்விளைச்சல் ரகத் தானியங்களை அறிமுகப்படுத்தும் பிரச்சார இயக்கத்தை அமைச்சர் துவக்கிவைத்தார்.

"தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் 5 இலட்சம் ஏக்கர் நிலங்களில் உயர் விளைச்சல் ரகத்தானியங்கள் பயிரிடப்படும்" எனறும அவர் சொன்னார்.

மத்திய அரசாங்க வேளாண்மைத் துறை கூட்டு இயக்குநர் அன்னு ஜார்ஜை சென்னையில் தாம் சந்தித்ததாகவும், தமிழ் நாட்டுக்குப் போதுமான அளவு உரங்கள் வழங்கப்படும் என்று அவர் தம்மிடம் உறுதி கூறியதாகவும் அமைச்சர் சொன்னார்.

மாவட்டக் கலெக்டர் என். கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்; வேளாண்மையில் நவீன முறைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்வதற்காக இந்த இயக்கம் நடத்தப்படுகிறது" என்று அவர் கூறினார்.

நீர் மின்சார நிலையங்களில் சேமிப்பு குறைந்ததன் விளைவு

மின்சார வெட்டு செயல்படுத்தப்படுகிறது

தமிழ்நாட்டில் கொண்டுவரப்படும் நிலைபற்றி விளக்கம்

சென்னை, செப். 25—

தமிழ்நாட்டிலுள்ள நீர் மின்சார நிலையங்களில் சேமிப்பு நிலை குறைவாக இருப்பதாலும் -- இதர பிரிவுகளிலிருந்து கிடைக்கும் மின்சார அளவு குறைந்து வருவதாலும் -- கிடைக்கக்கூடிய சேமிப்பை அடுத்த பருவ மழைக் காலம் வரையில் பாதுகாத்து வைப்பதற்காகவும் தமிழ்நாட்டில் அக்டோபர் 1-ம் நாள் முதல் மின்சார வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இரயில்வே -- மருத்துவமனை -- தண்ணீர் வழங்கும் நிலையம் -- சுகாதார ஏற்பாடுகள் -- வானொலி நிலையங்கள் -- அஞ்சல், தந்தி, தொலைபேசி நிலையங்கள் -- இராணுவ நிறுவனங்கள் -- இராணுவத் தொழிற்சாலைகள் -- துறைமுகங்கள் -- விமான நிலையங்கள் -- வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் -- நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்கள் -- அரசாங்க அச்சகங்கள் -- அரசாங்கக் கூட்டுறவுத் துறை -- பால் பண்ணைகள் -- மதனிடும் தொழிற்சாலைகள் ஆகியவைகளுக்கு இந்த மின்சார வெட்டிலிருந்து விதிவிலக்கு உண்டு; இன்றியமையாப் பணிகளை இது பாதிக்காது.

25 சதவிகித மின்சார வெட்டு கொண்டு வரப்படுகிறது. (அதாவது வழக்கமாக 100 யூனிட் பயன்படுத்தியவர்கள், இனிமேல் 75 யூனிட் பயன்படுத்த வேண்டும்.)

24 மணி நேரமும் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலைகளுக்கு 15 சதவிகித மின்சார வெட்டு.

பத்திரிகைகளுக்கு 10 சதவிகித வெட்டு உண்டு.

வீடுகளுக்கு மின்சார வெட்டு கிடையாது; ஆனால் குறிப்பிட்ட அளவுக்குமேல் மின்சாரம் பயன்படுத்தினால், அந்தக் கூடுதல் யூனிட்டுகளுக்கு இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

தொழிற்சாலைகளில் ஒரு வாரத்துக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு மின்சாரம் கொடுக்கப்படும்; அந்த அளவுக்கு அதிகமாக மின்சாரம் பயன்படுத்தினால் இணைப்பு துண்டிக்கப்படும்; அந்தக் கூடுதல் யூனிட்டுகளுக்கு இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்; அத்துடன் அடுத்த வாரக் கோட்டாவில் இந்தக் கூடுதல் யூனிட்டுகள் கழிக்கப்பட்டுவிடும்.

வீடுகள் -- அரசாங்க அலுவலகங்கள் -- கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தினால், இணைப்புத் துண்டிக்கப்பட மாட்டாது.

'குறிப்பிட்ட அளவு' என்பது, கடந்த ஆகஸ்டு மாதத்தில் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்பட்டதோ, அந்த யூனிட்டுகளைக் குறிக்கும்; எடுத்துக்காட்டாக, ஒரு வீட்டில், கடந்த ஆகஸ்டு மாதத்தில் 50 யூனிட் பயன்படுத்தினால், இனிமேலும் 50 யூனிட் பயன்படுத்தலாம்; இனிமேல் 60 யூனிட்டு பயன்படுத்தினால் அந்த 10 யூனிட்டுகளுக்கு 2 மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

அரிசி ஆலை -- எண்ணெய் ஆலை -- தேயிலை, காப்பி நிறுவனங்கள் -- கரும்பு சாறு பிழியும் ஆலைகள் போனறவற்றில், அந்தந்தப் பருவ காலத்துக்கு ஏற்ப மின்சாரம் தேவைப்படும்; எனவே இவைகளுக்கு முந்திய ஆண்டில் அதே மாதத்தில் பயன்படுத்திய மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் கொடுக்கப்படும்; (விளக்கம்:—1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஓர் அரிசி ஆலையில் 100 யூனிட்டு பயன்படுத்தப்பட்டால், 1972-ம் ஆண்டும் அதே 100 யூனிட்டை அடிப்படையாகக் கொண்டு -- 25 சதவிகித வெட்டு போக மீதி 75 யூனிட்டு மின்சாரம் கொடுக்கப்படும்.)

தெரு விளக்குகள் ஒன்றுவிட்டு ஒன்று எரியும்.

திரைப் படப் பிடிப்பு நிலையங்களுக்கு (ஸ்டுடியோக்களுக்கு) மாலை 6 மணி முதல் 10 மணி வரை மின்சாரம் நிறுத்தப்படும்.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின்சார வெட்டு கிடையாது; ஆனால், பம்பு செட்டு இருக்கும் இடங்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து -- ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நாளைக்கு 6-மணி நேரம் மின்சாரம் வழங்கப்படும்; ஆனால், மாலை 6-மணி முதல் இரவு 10 மணி வரையில் எந்த பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படமாட்டாது.

அலங்கார விளக்குகள்--'நியான்' விளக்குகள் ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்கப்படமாட்டாது.

வீடு -- விவசாயப் பம்பு செட்டு ஆகியவைகளுக்கு மட்டும் புதிதாக மின்சார இணைப்பு கொடுக்கப்படும்; மற்ற வகைகளுக்குக் கிடைக்காது.

தொழிலாளர்கட்கு உதவ தனி நிதி

மத்திய அமைச்சர் தகவல்

பம்பாய், செப். 23—

"உரியவர்களால் வசூலிக்கப்படாமல் விடப்படுகின்ற தொழிலாளர் வைப்பு நிதியை ஒரு தனி நிதியில் சேர்த்திடவும் -- சில முதலாளிகள் வைப்பு நிதிப் பணத்தை செலுத்தாமல்போய் விடுவதால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு இந்தத் தனி நிதியிலிருந்து உதவவும் ஒரு திட்டம் இருக்கிறது"

என்று, மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆர். கே. காடில்கர், தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

'தாங்கள் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தாததுடன், தொழிலாளரின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யும் பணத்தையும் வைப்பு நிதி ஆணையரிடம் செலுத்தாமல் காலம் கடத்தும் தொழிலதிபர்களுக்குச் சிறைத் தண்டனை அளிக்கவும் சட்டம் செய்யப்படும்.

கூடுதலாக விளைச்சலை பெருக்கத் திட்டம்

கல்லூரி மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவர்

புதுடில்லி, செப். 25—

விளைச்சலைப் பெருக்கும் பிரச்சார வெற்றியடையத் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்படுமானால், வேளாண்மைக் கல்லூரிகள் -- பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் மாணவர்கள் வெளியே வந்து விவசாயிகளுடன் சேர்ந்து வயல்களில் சில காலம் பாடுபடுவர்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் இத்திட்டத்தை வகுத்திருக்கிறது.

இத்திட்டம் குறித்து செப். 30-ல் மாநில முதலமைச்சர்கள் மாநாடு விவாதிக்கும்.

மழை தாமதமாகப் பெய்ததால் விளைச்சலில் ஏற்படும் பற்றாக் குறையைச் சரிபடுத்துவதற்காகக் கூடுதலாக 150 கோடி டன் உணவுத் தானியங்களை விளைவிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி இடம் மாறாது

பேராசிரியர் க. அன்பழகன் அறிவிப்பு

'அனுபவப் பயிற்சிக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும்' என உறுதி

திருச்சி, செப். 25—

"செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சென்னைக்கு மாற்றும் முடிவு இல்லை" என்று, மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள், இங்கு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் போதுமான நோயாளிகள் வராததால், தங்களுக்கு அனுபவப் பயிற்சி பெற வசதி போதவில்லை என்று இறுதியாண்டு மாணவர்கள் தெரிவித்து கல்லூரியைச் சென்னைக்கு மாற்ற வேண்டுமென்று கோரி வருகின்றனர்; இது குறித்து அவசர முடிவு ஏதும் அரசு எடுக்காது" என்று அமைச்சர் தெரிவித்தார்; 'ஆயினும், மாணவர்கட்கு அனுபவப் பயிற்சி அளிக்க மாற்று ஏற்பாடு பற்றி கவனிக்கப்படுமெனவும், அவர்கள் சென்னைக்கு அனுப்பப்படலாம்' என்றும் அவர் தெரிவித்தார்.

"தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புப் பயிற்சிக்கு வசதி செய்து தரப்படுமா?'

என்று கேட்கப்பட்டதற்கு அமைச்சர் பதிலளித்ததாவது:—

"அதற்கு அனுபவம் வாய்ந்த முதிர்ந்த பேராசிரியர்களும் -- நிபுணர்களும் தேவைப்படுவதால், சில ஆண்டுகள் ஆகும்."

பறிமுதலான மருந்து

அண்மையில் சென்னையில் 'பிப்டால்' என்ற மருந்து கொடுக்கப்பட்ட குழந்தை ஒன்று இறந்துவிட்டதைத் தொடர்ந்து அம்மருந்துகளெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டதாக அமைச்சர் அறிவித்தார்.

"ஆயினும், பரிசோதனையில் அம்மருந்து தீங்கற்றது என்று தெளிவானால், கைப்பற்றப்பட்ட மருந்து திருப்பித் தரப்படும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சென்னைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதி

வழிமுறைகள் பற்றி ஆய்வு

சென்னை, செப். 25—

"சென்னைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக நகரில் ஓர் இடத்தில் தனிநிலையம் ஒன்றைக் கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இருக்கிறது"

என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தெரிவித்தார்.

திருமண மண்டப உரிமையாளர்கள் -- சென்னை மாநகராட்சி -- வீட்டு வசதி வாரியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் பேசினார்.

சென்னைக் கலெக்டர் அகமது இக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்.

சொகுசு பஸ்கள் -- சுற்றுலாப் பஸ்கள் ஆகியவற்றில் சென்னைக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு உதவுவதற்கான வழிமுறைகளைப் பற்றி இக்கூட்டம் ஆராய்ந்தது.

நகரில் தற்போதுள்ள திருமண மண்டபங்களைக் கணக்கெடுத்துச் சுற்றுலாப் பயணிகள் இவற்றைப் பயன்படுத்தத் தகுந்ததா என்பதைச் சுற்றுலா வாரியம் ஆராய வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானித்தது.

மத்திய அரசின் மாதிரிப் பள்ளித் திட்டம்

மாநில அரசிடமே நிர்வாகப் பொறுப்பு

செய்தியாளர்களிடம் நாவலர் விளக்கம்

சென்னை, செப். 23—

"நாடு முழுவதிலும் மாதிரிப் பள்ளிகளைத் துவக்குவதைக் கொள்கையளவில் மத்தியக் கல்வி ஆலோசனை வாரியம் ஏற்றுக்கொண்ட போதிலும், இத்திட்டத்தைத் திட்டக் குழு அங்கீகரித்தாக வேண்டும்.

"மாவட்ட மட்டத்தில் ஒரு மாதிரி உயர்நிலைப் பள்ளியையும்--பிளாக் மட்டத்தில் ஒரு மாதிரி உயர்நிலைப் பள்ளியையும் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; இத்திட்டத்தை நாடு முழுதும் செயல்படுத்த ரூ. 10 கோடி செலவாகும்.

"இது மத்திய அரசு துவக்கும் திட்டமாக இருந்தபோதிலும், இப்பள்ளிகளின் மீது மாநில அரசுகளுக்கு முழு அதிகாரம் இருக்கும்; இத்தகைய பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மொழிக் கொள்கை, சம்பந்தப்பட்ட மாநிலத்தின் மொழிக் கொள்கையாக இருக்கும்; தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இரு மொழிக் கொள்கையாக இருக்கும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் அவர்கள், செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டித்தெளிவுபடுத்தினர்.

குடிநீர்ப் பிரச்சினை

செய்தியாளர்:—"சென்னை நகரில் பல இடங்களில் -- குறிப்பாக எல்லை ஓரக் காலனிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது; அதைப் போக்கக் குழாய்க் கிணறுகள் அங்கு தோண்டப்படுமா?"

நாவலர்:—"சென்னை மாநகராட்சியிடமிருந்து அப்படி அறிக்கை எதுவும் வரவில்லை; கமிஷனர் ஏதாவது கூறினால் செய்யப்படும்."

தலைமைக் கழக அறிவிப்பு

புதுவை மாநில தி.மு.க. அமைப்புக் குழு உறுப்பினர்கள் நியமனம்

சென்னையில் 7-4-72 அன்று நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்ட முடிவுப்படி, கீழ்க்கண்டவர்கள் அடங்கிய புதுவை மாநில தி. மு. க. அமைப்புக் குழு தற்காலிகமாகத் தலைமைக் கழகத்தால் அமைக்கப்படுகிறது.

நிலையான மாநில அமைப்புக் குழு முறைப்படி அங்கு அமையும் வரையில் இந்தக் குழு பணியாற்றிவரும்.

புதுவை மாநிலத்தில் ஏற்கனவே இருந்துவருகிற கிளை -- வட்டக் கழக அமைப்புகள் தொடர்ந்து செயலாற்றிவரும்.

தற்காலிகமாக இந்தக் குழு, புதுவை மாநிலத்தைப் பொறுத்து கழக ஆக்கப் பணிகள் குறித்தும், கீழ் அமைப்புக்களோடு தொடர்புகொள்வதைக் குறித்தும் தலைமைக் கழகத்துடன் கலந்து தனது பணிகளை நிறைவேற்றும்.

அமைப்புக் குழு உறுப்பினர்கள்!

1. திரு. எம். ஓ. எச். பாரூக் (புதுவை முதல்வர்) அமைப்பாளர்
2. திரு. எஸ். இராமசாமி (அமைச்சர்)
3. திரு. எம். ஏ. சண்முகம்
4. திரு. செ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
5. திரு. செ. முத்து எம்.எல்.ஏ.

'அறிவகம்' சென்னை-13
22—9—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

ஏழைகளின் உள்ளத்தில் என்றும் இருப்பவர்கள் நாங்கள்

இந்த ஆட்சியைக் கவிழ்க்க எந்தச் சக்தியாலும் இயலாது

குன்னூர் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ப. உ. சண்முகம் முழக்கம்

குன்னூர், செப். 25—

"'இந்த ஆட்சி இன்னும் எத்தனை நாள' என்று காங்கிரசுக்காரர்கள் கேட்கிறார்கள்; இதுகூடக் காமராசருக்குத் தெரியவில்லை; பாவம் -- என்ன செய்வார் அவர்!

"நாங்கள் எத்தனை நாட்கள் ஆட்சியில் இருப்போம் என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரியும்; அதாவது, ஏழை மக்கள் உள்ளத்தில் நாங்கள் குடியிருக்கும் வரை ஏழை எளியவர்கள் எங்களை விரும்பும் வரையில் நாங்கள் ஆட்சியில் இருப்போம்; எங்களை அமைச்சர்களாக்கியவர்கள் ஏழைகள் -- பணக்காரர்கள் அல்லர்!

'பணக்காரர்கள் தயவில் அமைச்சர்களாக இருக்க நாங்கள் ஆசைப்படவில்லை; பணக்காரர்களைப் பார்த்து நாங்கள் பயப்படப்போவதுமில்லை; இதனை, காமராசர் போன்றவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளட்டும்!

"'சுதந்தரம்' என்பது ஒரு சிலர் மட்டும் பெற்று அனுபவிப்பதல்ல; ஏழை எளியவர்கட்கு அடிப்படைத் தேவைகளைச் செய்து தருவது அவசியமாகும்; அறிஞர் அண்ணா இதைத்தான் சொன்னார்; அதற்காகவே பாடுபட்டார் -- செயலாற்றியும் வந்தார்!

"ஏழைகள் வாழ்வு உயருவதற்குத்தான் நாங்கள் தஞ்சையில், 54 000 ஏழை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினோம்; மேலும் ஏழைகட்கு நில -- வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவோம்; அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றிச் செல்வோம்"

என்று அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், குன்னூர் வி. பி. தெருவில் நகர தி.மு.க. சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெளிவுற விளக்கிக் கூறினர்.

கூட்டத்திற்கு குன்னூர் நகர தி.மு.க. செயலாளர் எச். தங்கம் தலைமைவகித்தார்.

திரு. ஜே. மாதா கவுடர் எம்.பி., திரு. எம். தேவராசன் எம்.எல்.ஏ., கே. பி. முருகேசன், கோவை ஏ. என். சாமி ஆகியோர் பேசினர்.

திரு. எஸ். எஸ். ஆகன் நன்றி கூறினர்.

அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரசுக் கட்சியினர் தாறுமாறாகத் திட்டுவதாகக் கழகத் தோழர்கள் வருத்தப்பட்டனர்; அவர்கள் நம்மைத் திட்டுவது இன்று புதிதா என்ன? திட்டித் திட்டித்தானே நம்மை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினர்கள்? இனியும் திட்டி இவர்கள் அழியத்தான் போகிறார்கள்!

சனநாயக அமைப்பில் எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அரசியலைப் பேசவேண்டும்; ஆட்சியிலுள்ள எங்களிடம் ஏதேனும் குற்றங்குறைகள் காணப்பட்டால் அதனை எடுத்துச் சொல்லட்டும் -- நாங்கள் திருத்திக் கொள்ளுகிறோம்; மக்கள் நல்வாழ்வுக்காக நல்ல திட்டங்களைக் கொடுக்கட்டும் -- அது உதவியாக இருக்கும்.

அதைவிடுத்து, ஏதோ இவர்களிடமிருந்து ஆட்சியை நாங்கள் பிடுங்கிக் கொண்டதைப்போல் பேசுவது -- ஆத்திரத்துடன் காமராசர் போன்றவர்கள் திட்டுவது சனநாயகத்திற்கு உரிய செயல் தானா?

இலஞ்சம் -- ஊழல் என்கிறார்கள்; யாரிடம் இலஞ்சம் வாங்கினோம் -- சொல்லட்டுமே!

பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் சரி -- கொள்ளையடிப்பவர்கள் பாதகர்கள் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

இலஞ்சம் வாங்க நாங்கள் விரும்பினால், 'காமதேனு' போன்று உள்ள முதலாளிகளையும் -- பெரும் நிலச்சுவான்தார்களையும் மிரட்டினால் போதாதா--கோடிக்கணக்கில குவியுமே!

நாங்கள் அப்படியா செய்கிறோம்? பஸ்களைத் தேசியமயமாக்கி வருகிறோம்; டி. வி. எஸ். -- ஏ. பி. டி. போன்ற பெரிய கம்பெனிகளை அரசு எடுத்துக்கொண்டு விட்டது; இவர்களா எங்களுக்கு இலஞ்சம் கொடுப்பார்கள்?

காமராசர் ஆட்சியில், கரும்புப் பயிர் செய்யவும், கால்நடைப் பண்ணை வைக்கவும் நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டது; இதனால் வடகாதிமங்கலம் தியாகராச முதலியார் -- மன்றாடியார் போன்றவர்கள் பல ஆயிரக்கணக்கான நிலங்களை வைத்துக்கொள்ள முடிந்தது; ஆனால் நாங்கள், 'அவைகளுக்கு விதி விலக்குக் கிடையாது' என்று சட்டம் இயற்றியிருக்கிறோம்; இப்படியெல்லாம் இருக்கையில், எங்களுக்கு யார் இலஞ்சம் கொடுக்கப் போகிறார்கள்?

காமராசர் ஆட்சியில்தானே பஸ் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம் தேர்தல் நிதி வசூல் செய்தார்கள்?"

கண்சிகிச்சை முகாம் நிறைவு நாள் விழா

குன்னூரில் நடந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை முகாம் நிறைவு நாள் விழாவில் அமைச்சர் ப. உ. சண்முகம் கலந்து கொண்டார்.

இந்த முகாமில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட 209 ஏழைகளுக்கு அமைச்சர் இலவசமாக கண்ணாடிகள் வழங்கிப் பேசியதாவது:—

"யார் எந்த நல்ல காரியம் செய்தாலும் அதைக் குறை கூறுவதற்கென்று சில பேர் இருக்கிறார்கள்.

இலவசக் கண் சிகிச்சை முகாம்களைப் பற்றிக்கூட ஒரு பெரிய தலைவர் குறை கூறியுள்ளார்; 'கருணாநிதிக்கும் -- கண்ணாடி விற்பனையாளர்க்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது' என்று அந்தப் பெரிய தலைவா கூறினர்.

கண் பார்வை இழந்த ஏழைகளுக்குப் பார்வை அளிக்கக் கலைஞர் எடுத்துக்கொண்ட இந்த நல்ல காரியத்தை இவ்வாறு பேசுவது சரியா என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

ஒரு நாட்டின் முதல்வர், கண்ணாடி விற்பனையாளர்களிடம் கமிசன் வாங்குவதாகப் பொருள்படும்படி பேசுவது முறைதானா?

கண்பார்வை இழந்தவர்களுக்குத்தான் பார்வையின் அருமை தெரியும்; இழந்த பார்வை மீண்டும் கிடைக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி எப்படிப்பட்டது என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

வசதியில்லாத ஏழை எளியவர்களுக்குக் கண்பார்வையைத் தர நாங்கள் திட்டமிட்டு இது போன்ற இலவசக் கண்சிகிச்சை முகாம்களை நடத்தி வருகிறோம்.

வாழ்நாட்களில் நாம் ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்தே ஆகவேண்டும் -- என்று ஒவ்வொருவரும் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

ஏழைகளின் நல்வாழ்வுக்காக நாம பாடுபடவேண்டும், நாம் செய்யும் நல்ல காரியங்களைப் பற்றிக் கேலி செய்பவர்கள் செய்துகொண்டு -போகட்டும் -- நாம் கவலைப்படத் தேவையில்லை.

இலவசக் கண்சிகிச்சை முகாம் மூலம்தான் கலைஞர் மக்களுக்கு அறிமுகமாகவேண்டிய நிலை இல்லை; உழைப்பால் உயர்ந்தவர் கலைஞர்; உழைப்பவர்கள் -- ஏழை எளியோர்களின் நல்வாழ்வுக்காக உழைப்பவர்கள்தான தலைவனாக முடியும் விளம்பரத்தால் தலைவனாக முடியாது."

நீலகிரி மாவட்ட ஆட்சி தலைவரின் நேர்முக உதவியாளர் திரு. சிட்னி தலைமை தாங்கினர்.

டாக்டர் திருமதி சரளாகிருஷ்ணமூர்த்தி எல்லோரையும் வரவேற்றார்.

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, திரு. ஜெ. மாதாகவுடர் எம்.பி., எம். தேவராசன் எம்.எல்.சி., கே. பி. முருகேசன், எம். இராமன் ஆகியோர் பேசினர்.

இந்த முகாமில் மொத்தம் 2,814 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது; 209 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

சிகிச்சைக்கு வருபவர்களுக்கு முதல் இரண்டு நாட்கள் இலவச வாகன வசதி செய்யப்பட்டிருந்தது.

ஏழைகளுக்கு நிலப் பட்டா

அமைச்சர் ப. உ. சண்முகம் வழங்கினர்

குன்னூர், செப். 20—

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகில் உள்ள பந்தலூரில் நிலப் பட்டா அளிக்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு திரு. ஜே. மாதா கவுடர் எம்.பி. தலைமை வகித்தார்.

2600 ஏழைகளுக்கு பட்டா வழங்கி வருவாய்த் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள் பேசியதாவது:—

"நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா பகுதியில் தமிழ்நாடு அரசு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் புறக்கணிப்பதாகவும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரை மட்டும் கவனித்து வருவதாகவும் ஒரு தவறான எண்ணம் நிலவிவருகிறது; இது தவறு.

இப்பகுதியில் அரசாங்க நிலத்தைப் பலர் ஆக்கிரமித்திருந்தனர்; இவர்களைச் சட்ட ரீதியில் அப்புறப்படுத்தினோம்; இதில் சமுதாய வேறு காண்பிக்கப்படவில்லை.

இப்பொழுது நிலமற்ற ஏழைகளுக்கு நிலப் பட்டா வழங்குகிறோம்; 2600 ஏழைகளுக்கு நிலப் பட்டா இன்றையத் தினம் வழங்கப்படுகிறது; இதிலிருந்து, கழக அரசு ஏழைகள் நலனில் அக்கறை கொண்டிருப்பதைத் தெளிவுறத் தெரிந்துகொள்ளலாம்.

இந்த அரசு, ஏழை எளியவர்கள் நல்வாழ்வுக்காகத் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது.

'ஏழைகள் நல்வாழ்வுக்கு' என்று கூறும்போது, 'பணக்காரர்களை ஒழித்துக்கட்டுவது' என்று பொருள் அல்ல!

இந்த அரசு ஏழைகள் நல்வாழ்வுக்காகத்தான் பாடுபடும் என்பதை அனைவரும் உணர வேண்டும்."

சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். தேவராசன், கூடலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எம். அபு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். சாமிநாதன் ஆகியோர் பேசினர்.

நெல்லியாளம் பேரூராட்சித் தலைவர் கோபாலகிருஷ்ண நாயர் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

கிராமங்களில் குடி நீர்ப் பிரச்சினை

தமிழக அரசு செலுத்தும் அக்கறை பற்றி அமைச்சர்

அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்களுக்குக் குன்னூர் நகராட்சி மன்றச் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் ப உ. சண்முகம் அவர்கள் பேசியதாவது:—

"நகராட்சி--பேரூராட்சி மன்றங்கள்தான், அரசியல்வாதிகளுக்கு முதற்படியாகும். நகராட்சிகளுக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டும் என்று சொல்லுகிறோம்; ஆனால் இது வாதத்திற்குரிய பிரச்சினையாகும்.

திரைப்படக் கொட்டகைகளில் கேளிக்கை வரி மூலம் கிடைக்கும் வருவாயில் 95 சதவிகிதத்தை நகராட்சிகளுக்கே திருப்பித் தந்துவிடுகிறோம்.

திரைப்படக் கொட்டகைகளில் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது; இதை வர்த்தக வரி அதிகாரிகள் கவனித்துக்கொள்வார்கள் என்று இருந்துவிடக்கூடாது; நகராட்சி அதிகாரிகளும்--திரைப்படக் கொட்டகைகளுக்கு அடிக்கடி சென்று சோதனையிட வேண்டும்.

ஏதோ சம்பளம் வாங்குவதற்காக மட்டும் நகராட்சி அலுவலகம் இருக்கிறது--என்கின்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழாமல் இருக்கும் வண்ணம் அனைவரும் பணியாற்ற வேண்டும்.

சுதந்தரம் பெற்று 25 ஆண்டுகளாகியும் குடிநீர் தேவை தீர்த்து வைக்கப்படவில்லை; குடிப்பதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்காமல் இருப்பது நமக்கெல்லாம் அவமானமாகும்; குறிப்பாகக் கிராமப்புறங்களிலுள்ள குளங்களில் ஒருபுறத்தில் ஆடு -- மாடுகளைக் கழுவுவார்கள்; மற்றொரு புறத்தில துணிகளைத் துவைப்பார்கள்; அதே குளங்களில்தான் குடிப்பதற்குத் தாய்மார்கள் தண்ணீரை எடுத்துச் செல்லுவார்கள்; இந்த அவல நிலை கிராமப்புறங்களில் உள்ளது.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான் தமிழக அரசு குடிநீர் வாரியம் அமைத்துக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கத் திட்டமிடப்பட்டு வேலை செய்து வருகிறது; மழையை நம்பியே குடிநீர்ப் பிரச்சினை இருக்கக்கூடாது.

நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நல்ல பெயர் எடுப்பது மிகவும் சிரமம்; அதிகாரத்தில உள்ளவர்கள் சாதாரண மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும்.

நகராட்சி மன்ற உறுப்பினர்கள் வாரம் ஒரு முறையாவது வாக்காளர்களைச் சந்திக்க வேண்டும்; மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும்."

நகராட்சி மன்றத் தலைவர் திரு. கே.பி. முருகேசன் அமைச்சரை வரவேற்று, நகராட்சி மன்ற உறுப்பினர்கள்--அதிகாரிகளை அறிமுகம் செய்துவைத்து, வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

திரு. ஜே மாதா கவுடர் எம்.பி., எம். தேவராசன் எம்.எல்.ஏ., நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். சாமிநாதன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

எல்லாக் கிராமங்கட்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

ஏழாண்டுகளில் வழங்கத் திட்டம்

செங்கற்பட்டு, செப். 23—

"தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இன்னும் ஏழாண்டுகளில் குடிநீர் வழங்கத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது"

என்று அமைச்சர் கண்ணப்பன், செங்கற்பட்டு மாவட்டம் தென்பாக்கத்தில் ரூ. 23 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பாலத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் கூறியதாவது:—

"மத்திய அரசின் உதவித் தொகை வராவிட்டாலும் தமிழகத்திறகுத் தேவையானதைச் செய்ய மாநில அரசு தயாராக இருக்கிறது; இந்தப் பாலத்திற்கு ரூ 23 இலட்சம் கடனாகப் பெற்றிருக்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ 361 இலட்சம் செலவில் இந்த ஆண்டு வேலைகள் நடக்கின்றன; இந்தப் பாலம் அமைவதில் எந்த விதத் தடங்கலும் இருக்காது.

1,500 பேருக்கு மேல் வசிக்கும் கிராமங்களுக்கெல்லாம் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டு--அதனைச் செயல்படுத்தவும் தொடங்கியிருக்கிறது.

சாதாரண மக்களால் ஏற்படுத்தப்பட்டது இந்த அரசு; ஆகவே கிராம முன்னேற்றத்துக்காகப் பல காரியங்களைச் செய்துவருகிறது.

தமிழ்நாட்டுலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இன்னும் ஏழாண்டுக் காலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கும் திட்டத்தை அரசு வகுத்துள்ளது; போதுமான பணம் இல்லையென ஊராட்சி மன்றங்கள் சொன்னால், கடன் வசூல் செய்து கொடுத்து குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதேபோல், இன்னும் ஓராண்டில் தமிழ்நாட்டில் எல்லாக கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விடும்; இப்போது 5 மாவட்டங்களில் மின்சார இணைப்பு முழுமை பெற்றிருக்கிறது."

அமைச்சர் அடிக்கல் நாட்டினர்

செங்கற்பட்டு, செப். 24—

கீழ்க் கடற்கரைச் சாலையில் தென்பாக்கம் அருகில் ரூ. 23 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பாலத்தின் அடிக்கல் நாட்டு விழா திரு. வி. பாலசுந்தரம் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது.

அறநிலைய அமைச்சர் கண்ணப்பன் அடிக்கல் நாட்டினர். திரு. பத்மநாபன் வரவேற்றுப் பேசினர்.

சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் முத்துகுமரப்பா, சி. சிட்டிபாபு எம்.பி., வி வெங்கா எம்.எல்.சி., காஞ்சிபுரம் நகராட்சித் தலைவர் கே டி.எஸ் மணி, ஆறுமுகம் எம்.எல் ஏ., செ.கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ. ஆகியோரும் பேசினர்.

திரு. தேவப்பிரியம் நன்றி கூறினர்.

பர்மாவிலிருந்து மேலும் அகதிகள் வருகை

சென்னை, செப். 25—

பர்மாவிலிருந்து 'எஸ் எஸ். சவுதி' என்னும் கப்பல் மூலம் 1,130 அகதிகள் கடந்த சனிக்கிழமையன்று சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களில் இங்கு உறவினர்கள் யாரும் இல்லாத அனைவரும் கும்மிடிப்பூண்டிக்கு அருகிலுள்ள 'பர்மா அகதிகள் முகாமுக்கு' அனுப்பப்படுவர்.

பர்மாவிலிருந்து இதுவரையில் 115 அகதிக் குழுவினர் வந்துள்ளனர்; இன்று வந்தது 116 குழுவாகும்.

இவர்களில் பெரியவர்கள் 671 பேர்; சிறுவர் சிறுமியர் 424 பேர்; 35 கைக்குழந்தைகளும் இக்குழுவில் இருந்தனர்.

இவர்களுக்கு சென்னை துறைமுகத்தில் இலவச உணவு அளிக்கப்பட்டது.

கோவையில் புதுமுறை கண் சிகிச்சை முகாம்

முதல்வர் கலைஞர் திறந்துவைத்தார்

ஆறு திங்களில் 4,000 பேர் சிகிச்சை பெறுவர்

கோவை செப். 25—

இங்கு 'ஸ்டேன்ஸ்' ஆலை திருமண மண்டபத்தில், தனிக் கண் சிகிச்சை முகாம் ஒன்றை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று துவக்கிவைத்தார்; 'இதுபோன்ற கண் சிகிச்சை முகாம்களில், தமிழ்நாட்டில் இதுவே முதலாவதாகும்' என்று அவர் அப்போது கூறினார்.

இந்த முகாம் இந்தத் திருமண மண்டபத்தில் 6 மாத காலத்துக்கு இயங்கும்; வாரத்தில் 200 பேருக்கு என்ற வீதத்தில் 6 மாத காலத்தில் சுமார் 4 000 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்படும். கோவையிலும் – சுற்றுப்புறக் கிராமங்களிலும் நடக்கும் இலவசக் கண் சிகிச்சை முகாம்களுக்கு இது அறுவைச் சிகிச்சை செய்யும் கூடமாக இயங்கும்.

முகாமைத் தொடங்கிவைத்து முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் 10 இலட்சம் பேர் கண் நோய்களினால் சிரமப்படுகின்றனர்; இவர்களில் சுமார் 1-இலட்சம் பேருக்கு இவ்வாண்டில் அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பிச்சைக்காரர் நிவாரண நிதிக்கு இதுவரையில் ரூ. 1 கோடி கிடைத்துள்ளது; ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒன்று என்ற கணக்கில் மொத்தம் 10 மறுவாழ்வு நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது."

அமைச்சர்கள் பங்கேற்பு

அமைச்சர்கள் எஸ். ஜே சாதிக் பாட்சா, மு. கண்ணப்பன் ஆகியோர் இலவசக் கண் சிகிச்சை முகாம்களின் நலன்களை எடுத்துரைத்து, இந்த வசதியை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

மாவட்ட கலெக்டர் சிவசங்கர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இம்மாவட்டத்தில் 10,000 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், முதலமைச்சர் கண் சிகிச்சை நிதிக்காக மாவட்டத்தின் சார்பில் ரூ. 8 இலட்சத்துக்கான 'செக்'கை வழங்கினார்.

ஆசிரியப் பட்டதாரிகட்கு வேலைவாய்ப்பு

வேலை தேடித்தரும் நிலையத்தின் மூலம் ஏற்பாடு

சென்னை, செப். 25—

வேலையில்லாமல் இருக்கும் பி.டி. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தை வேலைவாய்ப்புத்துறை தொடங்கியிருக்கிறது.

பி.டி. பட்டமும் -- அதற்குமேல் படிப்பும் படித்து வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக இந்தப் புதிய திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது; இதன்படி அவர்களுக்கு 'பிரைவேட் டியூஷன்' (விரும்பும் மாணவர்களுக்குத் தனியாகக் கற்பிப்பது) கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

வேலைவாய்ப்புத் தேடித் தரும் அலுவலகங்களில் பதிவு செய்திருக்கும் பட்டதாரிகளுக்குப் 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக்கொடுக்க சம்மதமா -- என்று எழுதிக் கேட்கப்படும்; அப்படியானால், காலை அல்லது மாலையில் எத்தனை மணி நேரம் ஒதுக்கமுடியும் -- சம்பளம் எவ்வளவுவேண்டும் -- என்பதைத் தெரிவிக்கும்படி அவர்களிடம் கேட்கப்படும்.

அவர்களிடமிருந்து பதில் வந்ததும், 'பிரைவேட் டியூஷன்' வைத்துக்கொள்ள விரும்பும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு இந்தப் பட்டதாரிகள் அடங்கிய பெயர்ப் பட்டியல் அனுப்பி வைக்கப்படும்.

முதலாவதாக, இந்தத் திட்டம் சோதனை முறையாக நடத்திப் பார்க்கப்படும்; இதன் பலன்கள் தெரிந்தபின், எல்லாப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின்படி ஏற்கனவே சென்னை நகரில் 700 பட்டதாரிகள் 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக்கொடுக்க ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்குத் தண்டனை விதிக்கும் சட்டம்

நடைமுறைக்கு வந்துவிட்டது

சென்னை, செப். 25—

கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் -- விற்பவர்கள் -- வெளியிடங்களுக்குக் கள்ளத்தனமாகச் சாராயம் கடத்துபவர்கள் ஆகியவர்களுக்குக் குறைந்தபட்சம சிறைத் தண்டனையும் -- அபராதமும் விதிக்கும் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது.

இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களைச் செய்தியாளர்களிடம் மதுவிலக்குக் கமிஷனர் என். அனந்த பத்மனாபன் விளக்கினார்.

லைசென்சு இன்றிக் கள்ளச்சாராயத் தயாரிப்பு -- கடத்தல் -- விற்பனையில் ஈடுபடுகின்றவர்களுக்கு இச் சட்டத்தின் மூலம் முதன் முறையாகக் குறைந்தபட்சத் தண்டனை விதிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

குறைந்தபட்ச தண்டனை மூன்று மாதச் சிறைவாசமும் -- ரூ. 500 அபராதமும் ஆகும்.

இதேபோல், கள்ளச் சாராயம் காய்ச்சவும்--காய்ச்சியதை விற்பனைக்காகக் கடத்தவும் சதிசெய்கிறவர்களுக்கும் குறைந்தபட்சத் தண்டனை விதிக்க இச்சட்டம் வழிசெய்கிறது.

அத்துடன், இதுபோன்ற குற்றங்களை உடனுக்குடன் விசாரித்துத் தண்டனை வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (14, [illegible]) [illegible] சென்னை-[illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

முதலமைச்சர் சூடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை 214

1960-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,361; வேலை நிறுத்த எண்ணிக்கை 331,

1971-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 6 419; வேலை நிறுத்த எண்ணிக்கை 308.

மேலும் 1959-ம் ஆண்டில் மதுரை பாண்டியன் மில் 2 மாதமும், சென்னை பி. அண்டு சி. மில் 3 மாதங்களும் மூடப்பட்டிருந்தன.

தொழிற்சாலைகள் என்றால் வேலைநிறுத்தங்கள் இருக்கத்தான் செய்யும்; சுமங்கலி என்றால் குங்குமப் பொட்டு இருப்பதுபோல -- குடும்பம் என்றால் ஊடல் இருப்பது போல -- தொழிற்சாலை என்றால் வேலை நிறுத்தம் இருக்கத்தான் செய்யும்; அப்போதுதான் உற்சாகமும் இருக்கும்.

வேலைநிறுத்தம் என்பது புதியதல்ல; 'அன்றைக்கு நடந்தால் இப்போது இருக்க வேண்டுமா' என்று கேட்டால் நியாயம் இருக்கும்; ஆனால், தமிழகத்தில் மட்டுமே தொழில் அமைதி கெட்டு இங்கு வருவதற்குத் தொழிலதிபர்கள் பயப்படுவதுபோல் இங்குள்ள சிலரும், மத்தியில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த சில பெரியவர்களும் கூறி வருவது வருந்தத்தக்கது.

ஐதராபாத்திற்கு நான் சென்றபோது அங்கு பேசிய மைசூர் மாநிலத் தொழில் அமைச்சர் கிருஷ்ணா, 'மைசூரில் தொழில் அமைதி இல்லை' என்றார்; அந்தத் தொழில் அமைச்சரே அப்படி குறிப்பிடுகிறார் என்றால், பார்த்துக்கொள்ளுங்களேன்!

தி. மு. கழகம் ஆட்சியில் இருந்தாலும் அல்லது எதிர்க் கட்சியாக இருந்தாலும், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி வேகமாக ஏற்பட வேண்டுமென்று கூறிவந்திருக்கிறது.

குறிப்பிட்ட சில இடங்களில் அல்லது பகுதிகளில் மட்டுமன்றித் தமிழ்நாடு முழுவதும் தொழில்கள் பெருக வேண்டும்; இதில் தொழிலதிபர்கள் ஒத்துழைப்பைப் பெற -- தனியார் துறையினருடன் கூட்டுத் திட்டங்களைத் துவக்கும் ஏற்பாட்டை அரசு உருவாக்கியது; இதற்குக் கிடைத்துள்ள ஒத்துழைப்பைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

படித்தவர்கள், 'படிப்புக்கு ஏற்ற ஊதியம் போதும்' என்று நினைக்காமல் தொழிலில் ஈடுபட வேண்டும்.

தொழில்துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தொழிலதிபர்கள் -- தொழிலாளர்கள் -- அரசு ஆகிய மூன்று சாராரும் சேர்ந்து பேசினால், பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்ந்துவிடும்!"

தொழில் அமைதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைகளை எழுப்புவதும் -- கிளர்ச்சிகளை நடத்துவதுமான வழக்கமான வழிகள் பயனற்றவை என்பதைத் தொழிலாளர்கள் உணர வேண்டிய காலம் வந்துவிட்டது.

குறைந்த வருமானம் உள்ள பிரிவினரின் அதிருப்தியை அகற்ற, ஊதியம் -- விலை -- வருமானம் பற்றிய ஒரு கொள்கையை அரசாங்கம் விரைவில் வகுக்கும்.

பாங்கிகள் -- இன்ஷ்யூரன்சு நிறுவனங்கள் -- ஏர் லைன்ஸ் போன்றவை உயர்ந்த ஊதியங்களை அளிக்கின்றன; இந்த ஊதியங்கள் ஒரு நியாயமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்படும்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகவலை மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ், நிருபர்களிடம் தெரிவித்தார்.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

26-9-72

வேப்பத்தூர்

தி.மு.க.--தி. க. சார்பில் மாலை 5-மணிக்கு; தலைவர்: பி. ஏ லிங்கன்; பேசுவோர்: அமைச்சர் என். வி. நடராசன், கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ., எஸ் ஆர். இராதா எம்.சி., சு. பத்மநாபன், இரா. இராமதாசன், கன்னையன், அ. கலையரசன், கே. கே. குஞ்சிதபாதம். (இரவு நாதசுர நிகழ்ச்சி)

அருப்புக்கோட்டை

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு தியாகராயர் வாலிபர் சங்கம் முன்பு: தலைவர்: க. சிவராமன்; பேசுவோர்: மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. எஸ்.எஸ் தென்னரசு எம்.எல்.சி. மு. முத்துவடுகு மற்றும் பலர்.

தாரமங்கலம்

அண்ணா மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்; டி.டி. நஞ்சப்பன்; பேசுவோர்: நள்ளாற்று நடராசன், சேலம் சின்னையன், தண்டபாணி, டி. சி. அரங்கசாமி, டி.சி. குமரசாமி, எஸ். எஸ். பெருமாள், டி. எஸ். மாதேசன்.

27-9-72

சென்னை 2 வது வட்டம்

மக்கள் முன்னேற்ற மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு எண்-1 காவல் நிலையம் அருகில் (மார்க்கெட் சந்து); தலைவர்: பி.சையத் பாட்சா; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், கவிஞர் குடியரசு, கே. எம். கண்ணபிரான் எம்.சி., மு. வேதாசலம் எம்.எல். ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், மு. பாண்டியன், கே. பி. பாண்டியன், ஜே. மணி, ஆர். வரதன்.

வேப்பத்தூர்

தி. மு. க. -- தி. க. சார்பில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா; மாலை 6-மணிக்கு: தலைவர்) பி. சிங்காரம்; பேசுவோர்: க. பாலகுரு, கோவி. நாராயணசாமி, டி. மாரிமுத்து, எஸ். ஏ. துரை, எஸ். தெய்வசிகாமணி, செ. கோவிந்தராசன், (இரவு நள்ளாற்று நடராசன்--பானுமதி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

தொழிலாளர்-நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

செப். 27 காலை 9 மணி: கோவை — மது நூற்பாலைத் தொழிற் சங்கக் கட்டடத் திறப்பு; 10 மணி: கார்த்திகேயா ஆலைத் தொழிலாளர் வரவேற்பு; 10-30 மணி: வரதராசபுரம் — சீரணி மூலம் குழந்தைகட்குச் சத்துணவு வழங்குதல்; மதியம் 12 மணி: உப்பிலிபாளையம் தொழிலாளர் வரவேற்பு; மாலை 4 மணி: நரசிம்மா ஆலைத் தொழிற் சங்கக் கட்டடத் திறப்பு; 5 மணி: வெள்ளலூர்— தி.மு.க. கொடியேற்று விழா; 6 மணி: போத்தனூர்—தொழிலாளர்கள் வரவேற்பு; இரவு 7 மணி: கோவை 34-வது வட்டப் பொதுமக்கள் வரவேற்பு.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

செப். 26 காலை 9-30 மணி: தர்மபுரி—புதிய உயர்நிலைப் பள்ளி கட்டடத் திறப்பு; மாலை 5-மணி: கிருஷ்ணகிரி—அறிவியல் கண்காட்சியினை தொடங்கிவைத்தல்; இரவு 7-மணி: கிருஷ்ணகிரி—பொதுமக்கள் வரவேற்பு; 8 30 மணி: அரூர்—பொதுமக்கள் வரவேற்பு.

செப். 27 காலை 9-மணி; செவ்வாய்ப்பேட்டை—மாரியம்மன் கோவில் கடைகள் அடிக்கல் நாட்டு விழா; 11 மணி: மல்லசமுத்திரம்—ஆரம்ப சுகாதார நிலையப் புதிய கட்டடம் திறப்பு; மாலை 4-மணி: சேலம் சுற்றுலா விடுதி புதிய கட்டடம் திறப்பு; 6-மணி: சேலம் தமிழ்ச் சங்கத்தில் அண்ணா பிறந்த நாள் விழா; இரவு 7-30 மணி: அம்மாபாளையம்—பொதுமக்கள் வரவேற்பு; 9-மணி: சேலம்—பொதுமக்கள் வரவேற்பு.

செப். 28 காலை 9-மணி: சோழாமூர் ஊராட்சிப் பள்ளிக் கட்டடம் திறப்பு; 9-30 மணி: முடிகொம்பட்டு—ஊராட்சிப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 10 45 மணி: சாங்குப்பம்—ஊராட்சிக் கல்லியாரை பெரியாங்குப்பம் பள்ளிக் கட்டடத் திறப்பு; 11-30 மணி: தி. வ. குப்பம் ஒன்றிய அலுவலகத்தில் காந்தி நூற்றாண்டு நினைவு மண்டபத் திறப்பு -- ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; பிற்பகல் 12 30 மணி: மகமதுபுரம்—முருகம்பட்டு ஊராட்சி மேனிர் தேக்கத தொட்டி திறப்பு; 3-மணி: காட்பாடி— ஆசிரியர்கள் மையத்தில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 4-மணி: காட்பாடி அரசினர் பயிற்சிக் கல்லூரி திறப்பு; 5-மணி: காட்பாடி உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டடத் திறப்பு; 6-மணி: காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் வரவேற்பு; இரவு 7 மணி: கழிஞ்சூர் ஊராட்சி வரவேற்பு -- பொதுமக்கள் வரவேற்பு; 8-30 மணி: கே. வி. குப்பம்— பொதுக்கூட்டம்.

நகராட்சித் தேர்தல்கள்

தஞ்சை, செப். 25—

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 6 நகராட்சிகளுக்கான தேர்தல் 1974 ஏப்ரலில் இதர நகராட்சிகளுக்கு நடக்கவிருக்கும் தேர்தலுடன் நடைபெறும்.

புதிதாக நகராட்சிகளாக மாற்றப்பட்டவைகள் வருமாறு:—

துறையூர் (திருச்சி மாவட்டம்)

விருத்தாசலம் (தென்னாற்காடு மாவட்டம்)

சத்தியமங்கலம் (கோவை மாவட்டம்)

பல்லவபுரம் (செங்கற்பட்டு மாவட்டம்)

சாத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

நாமக்கல் (சேலம் மாவட்டம்)

புதிய நகராட்சிகளுக்கு சில மாதங்களுக்குமுன் தேர்தல் நடத்த எண்ணப்பட்டது; ஆனால் மறுபரிசீலனையின்மீது தேர்தலை அரசு ஒத்திவைத்தது.

இந்த நகராட்சிகள் தற்போது தனி அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

புதிய நகராட்சிகள் முன்பு பேரூராட்சிகளாக இருந்தன.

அடுத்த சில மாதங்களில் சில நகராட்சிகளுடன் புதிய பகுதிகளை சேர்ப்பது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்; அதன்பின், 1974-ல் நடைபெறவிருக்கும் நகராட்சித் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணி துவங்கும்.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

செப். 27 மாலை 6-30 மணி: திருவத்திபுரம் (செய்யாறு)— அண்ணா பிறந்த நாள் பொதுக் கூட்டம்.